# சக்தி பீடங்களுள் ஒன்றாக விளங்கும் முன்னேஸ்வரம்

முன்னேஸ்வரம் மிகப்புராதனமான சிவஸ்தலம்.முன்னேஸ்வரம்,இராமேஸ்வரம்,திருக்கேதீஸ்வரம்,நகுலேஸ்வரம் எனும் பஞ்ச ஈஸ்வரங்களுள் முன்தோன்றிய ஈஸ்வரம் முன்னேஸ்வரம்.இம் முன்னேஸ்வரத்தில் ஸ்ரீ வடிவாம்பிகை தேவியுடன் ஸ்ரீ முன்னைநாத சுவாமி கருவறையில் சிவசக்தி ஐக்கியமாக விளங்கி அ ருள் பாளித்து வருகின்றார்.புராதன சிவஸ்தலமாக எவ்வளவு தூரம் பிரசித்தி பெற்றதோ அதே சிறப்புடைய சக்திபீடங்களுள் ஒன்றாகவும் முன்னேஸ்வரம் விளங்குகின்றது.

முன்னேஸ்வரம் இலங்கையில் கரையில் சிலாபம் நகரிற்கு கிழக்காக இரண்டு கிலோமீற்றர் தொலைவில் குருணாகல் வீதியில் முன்னேஸ்லரம் கிராமத்தில் அமைந்து விளங்குகின்றது.

பெரிய கோவில்,மஹாதேவாலயம் எனப் போற்றி அழைக்கப்படும் இத்தலம் மிக நீண்ட வரலாற்று சான்றாதாரங்களையும் இதிகாசபுராண ஐதீகக்கதை மரபுகளையும் கொண்டு விளங்குகின்றது.

இதிஹாச இலக்கியங்களான மஹாபாரதம்,இராமாயணம் என்பவற்றுள்;மஹாபாரதக்கதையுடன் தொடர்புடையதாக அர்ஜுனனது மகாராணியான அல்லி மகாராணி ஈாாாாாாா காலத்தில் முன்னேஸ்வரத்தில் ஒரு பகுதியினை அளித்ததாக ஐதீகங்கள் கதைகள் உண்டு. அதே போல் வியாசமகமுனிவர் காசியில் செய்த பாவத்தை முன்னேஸ்வரத்தில் தீர்த்த சிறப்பும் உண்டு.இராமாயணத்து தொடர்பில் இராவண சம்ஹாரத்தில் இராமனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தை நீக்கிய தலம் எனும் பெருமையும் முன்னேஸ்வரத்திற்கு உண்டு.

புராணங்களின் தொடர்புகளின்படி சிவமஹாபுராணத்தில் சனத்குமார சம்ஹிதையில் முன்னேஸ்வரத்தலம் அலகேஸ்வரம் அழைக்கப்படுகின்றது.பத்ம புராணத்தில் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் **ஸ்ரீலங்கா பீடம்,புவனேஸ்வரீ பீடம்,சாங்கரீ பீடம்** எனவும் மார்க்கண்டேய புராணத்தில் காமாக்ஷி விலாசம் எனும் பகுதியில் சிங்கள பீடம் என வலியுறுத்தப்பட்டிருப்பதும்,குப்ஜிகா தந்திரத்தில் தேவமோஹினீ பீடம் என சிறப்புகள் கூறப்படும் சிறப்புடைய புராதன சிவஸ்தலமான முன்னேஸ்வரம் சக்தி பீடங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது.

முன்னேஸ்வர ஸ்தலம் சுயம்புவாக விளங்கும் முன்னைநாதர் எனும் சிவவடிவத்தை பிரதானமான மூர்த்தியாகக் கொண்டு விளங்குகின்றது.கிழக்கு நோக்கியதும் மிகப் புராதனமானதும் பிரம்மாண்டதுமான கருவறையில் இடதுபுறம் ஒரு மேடையில் சிற்பி செதுக்காத சிலையாக சுயம்பு மூர்த்தியாக அழகின் இருப்பிடமாக அன்ன வடிவழகி விளங்குகின்றாள். இவ் வடிவழகி சிலை மிகவும் புராதனமானது. குலை வனப்பு மிக்கது.கவர்ச்சிகரமானது.பொன்மயமானது.யார்க்கும் தோறும் புதுமை அளிப்பது.தெவிட்டாத அழகு பொலிவது.யோக சக்தியாகவும்,வீர சக்தியாகவும்,ஸ்வாந்திர சக்தியாகவும் விளங்கும் சிறப்புடையது.த்ரிபங்கத்துடன் இருகைகளில் லம்பஹஸ்தரும்,கடகஹஸ்தரும் கொண்ட தோற்றத்தின் கலையழகு தனித்துவமானது.

இவ்வம்பிகையின் தோற்றுவாய்க்கு ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு.

‘ கடற்கரையில் இரு சிறுவனும் சிறுமியும் விளையாடிக்கொண்டிருந்தனர்.அவ்வழியால் வந்த செம்படவன் இருவரையும் பிடிக்க முயன்றான்.அவ்வேளை சிறுவன் காணாது மாயமாக மறைய சிறுமி பொன் வடிவமான சிலையானாள்.இதனை கேள்வியுற்ற கண்டி இராச்சிய மன்னன் அச்சிலையை பிடித்த செம்படவனையும் அரண்மனைக்கு அழைப்பித்து விசார்த்து மகிழ்ச்சியுற்றான்.எனினும் அதில் சந்தேகமுற்ற மன்னன் உண்மை நிலையினை எட்டு நாட்களின் பின் அறிவோம்.அதற்கு நீர் எட்டாம் நாள் அரண்மனைக்கு சமூகமளிக்க வேண்டும் என கட்டளை பிறப்பித்தான்.செம்படவனும் மனக்கலக்கமுடையவனாகவே விளங்கினான்.மன்னன் அச்சிலை போன்று ஆறு சிலைகளை செய்வித்து இச்சிலையையும் வைத்து ஒன்றுசேர இவன் சொல்லும் செய்தி இச்சிலைகள்ல் உண்மையான அடையாளம் காண வேண்டும் என்பதேயாகும்.ஏழாம் நாள் இரவில் அம்பிகை கனவிற் தோன்றி  நீ முதற்தடைவ பார்க்கும் போது ஏழு சிலைகளும் ஒரேமாதிரியே காணப்படும்.இரண்டாம் தடவை பார்க்கும் போது உண்மையான எனது சிலையில் வலது காலில் அசைவு ஏற்படும் .அதைக் கொண்டு என்னை அடையாளம் கொள்.கலங்காதே எனக் கூறினாள்.அதன்படி அரண்மனையில் நிகழ்ந்ததையும் உண்மை நிகழ்வையும் அறிந்து மகிழ்ச்சியுற்ற மன்னன் ராஜோபசாரங்களுடன் முன்னேஸ்வரத்திற்கு எழுந்தருளச் செய்வித்தான்’என்பதாகும்.இத்தெய்வீகம் மிக்க அம்பிகை திருவுருவமே இன்றும் நாம் கருவறையில் வழிபடுகின்ற வடிவழகியின் அழகு மிகு திருவுருவமாகும்.

சிவாலயம் எனும் சிறப்புடைய இத்தலத்து அம்பிகைக்கும் பராதன காலம் முதலாகவே முக்கியத்துவமுண்டு.இச்சிறப்புக்களை ஸ்ரீமத்தக்ஷிணகைலாச மஹாத்மியத்து செய்திகளினூடாகக் காணலாம்.

இலங்கையின் புராதன கோயில்களின் வரலாறு கூறும் வடமொழிப் புராண நூல் ஸ்ரீமத் தக்ஷிணகைலாச மஹாத்மியமாகும்.இந்நூல் ஸ்ரீமத் ஸ்காந்த மஹா புராணத்தில் இடம்பெறுகின்றது.இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இம் மஹாத்மியம் இருபத்தேழு அத்தியாயங்களைத் தன்னகத்தே கொண்டது.இதில் 16ம்,17ம் அத்தியாயங்கள் இரண்டும் முன்னேஸ்வர ஆலயம் தொடர்பான கதைகளை கூறுகின்றது.அதன்படி பதினாறாம் அத்தியாயம் 15 சுலோகங்களையும் முன்னேஸ்வர கோபுரத்தின் புராதன வரலாறு கூறும் படலமாகவும் அமைகின்றது.பதினேழாம் அத்தியாயம் 43 சுலோகங்களையும்ஒரு சர்க்காந்த பலசுருதியான சுலோகத்தினையும் கொண்டு ஸ்ரீ ராமசந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி நீங்கிய விபரம் கூறும் படலமாகவும் அமைகின்றது.

ஸ்ரீமத் தக்ஷிண கைலாச மஹாத்மியத்தில் கூறும் விபரப்படி முன்னேஸ்வர ஸ்தலத்தின் சிறப்பை விபரிக்கையில்:

‘ முன்னேஸ்வர ரோாாாாா கேள்வியுற்றாலே அனைத்து சித்திகளையும் அளிப்பது.அங்கு முன்னைநாதர் என அழைக்கப்படும் சிறந்த சுயம்பு லிங்கம் உள்ளது.பிரம்மா,விஷ்ணு,இந்திரன் முதலான தேவர்களினால் வழிபட்டு அனைத்து சித்திகளும் அளிக்கப்பட்டது.ஆகவே முன்னேஸ்வர ாாாாாாாாா மிகச் சிறந்தது. ’(16. 9 – 11) எனக் கூறுகின்றது. ’

மேலும் விளக்குகையில் :

‘சித்தாம்ருத மஹாதீர்த்தமானது அக்கினி போல் பாவத்தை பொசுக்கி புனிதமாக்கவது.இம் முன்னேஸ்வரத்தலத்தில் அனைத்து தீர்த்தங்களை விடவும் சிறப்பு உண்டு.சுயம்பு லிங்கத்தினுடைய விஷேஷத்தினாலும்,தீர்த்தத்தின் சிறப்பினாலும் ,இத்தலத்தின் மேலான அம்பிகையுடன் கூடி இருக்கும் சிவனின் வரலாற்றுச் சிறப்பினாலும் சிவனானவர் சக்தியுடன் சாந்நித்தியமாக விளங்குகின்றார்.எனவே இத்தலம் மேலானவற்றுள் மேலானது.கேள்வியுற்றாலே அனைத்து விருப்பங்களையும் வழங்கும் சிறப்புடையது.நிரந்தரமாகவே இத்தலத்தில் வசிக்கும் போது மேலான சிவ சாயுஜ்யத்தை வாழ்வின் இறுதியில் அளிப்பது.வாரணசி முதலான தேசங்களில் எப்போதும் ஜீவன் முக்தர்களே ஆகிறார்கள்.எனவே முன்னேஸ்வரத்தை ஒத்த சிவத்தலம் மூவுலகிலும் இல்லை .மகாபாதகங்களாகிய பஞ்சுப்பொறிகளுக்கு அக்கினி போன்றது.ஆதலினாலன்றோ உலகிலுள்ள யாவரும் எவ்வகைப் பாபங்களையும் நீக்கும் பொருட்டு அத்தலத்தினை அடைகிறார்கள்.அறியாமையாலோ,மோகத்தினாலோ, தற்செயலாகவோ ஒருவன் இம் முன்னேஸ்வரத்தலத்தை அடைவானேயானால் அவன் உடனடியாகவே அனைத்துப் பாபங்களிலிருந்தும் விடுபடுகின்றான்’.(16.12 – 18)எனக் கூறுகின்றது.

இதனை மேலும் வலியுறுத்திக் கூறுகையில்:

‘முற்காலத்தில் இராமன் அம்பினால் இராவணனைக் கொன்று தன் தேசத்தை நோக்கிச் செல்லும் போது வழியில் பிரம்மஹத்தி தொடர்வதைக் கண்டான்.இப்பிரம்மச்சாயை அச்சத்தைத் தருவதால் கையில் இரும்புலகடகையுடையதாய்ப் பின்தொடரும் பொழுது இராமன் முன்னேஸ்வரத்தைக் கண்டவுடன் அப்பிரம்மஹத்திச் சாயை மறைந்து போனது.எறும்பு முதல் யானை வரையான எல்லா ஜீவராசிகளும் அவ்விடத்திலேயே முக்தியடைகின்றன.

காசியில் செய்த பாபத்தை இம்முன்னேஸ்வர சிவத்தலமே நீக்கவல்லது. '(16.19 – 21) வடிவழகி அம்மை மீது முதலில் வியாசமகா முனிவர் எட்டுத் தோத்திரங்கள் மூலம் முதலிற் துதிக்கின்றார்.

' மகிமை பொருந்திய முன்னேஸ்வரத்திலே இருப்போய்!மிகவும் ஒளிருகின்ற இரத்திணாபரணங்களால் அழகு வாய்ந்தோய்!முன்னேஸ்வர வசனஅம்ருதத்தைப் பருகுவதில் விருப்புடையோய்!குமரனைப் பெற்றோய்!அடியேனைச் சீக்கிரம் வந்தருள்க:

ஸ்ரீவித்யையே,எல்லாம் அறிந்தவளே!பல்வகை ஆசனங்களில் இருப்பவளே!அடியார் விரும்பிய பலன்களை அளிக்கும் வல்லமையுடையோய்! இந்திரன் முதலான தேவர்கள் வணங்கும் திருவடித் தாமரைகளையுடையோய்! குமரனைப் பெற்றோய்! அடியேனைச் சீக்கிரம் காத்தருள்க.

எல்லாவற்றிற்கும் முழு முதல்வியே !விந்தை வடிவுடையோய்! வழிபடுபவர்களுக்கு அருள் புரிவோய்! சுந்தரீ! துவளுகின்ற கற்பகப்பூங்கொடியே! மேன்மையுடையோய்! குமரனைப் பெற்றோய் !அடியேனைச் சீக்கிரம் காத்தருள்க.

ஸ்ரீராஜராஜன் பணிவோடு வணங்கிய திருவடித்தாமரைகளையுடையவனே! அசுரர்களில் சிறந்த வீரனான மஹிஷாசுரனைக் கொன்றவளே! சிம்மாசனத்தில் வீற்றிருப்பவளே! நன்கு அலங்கரிக்கப்பட்ட மெல்லிய உடலுடையோய்! குமரனைப் பெற்றோய் !சீக்கிரம் அடியேனைக் காத்தருள்க.

சக்ரராஜம் எனச் சொல்லப்படுகின்ற ஸ்ரீசக்கரத்தில் லயித்து விளங்குபவளே! நாடோறும் விஷ்ணு முதலிய தேவர்களால் வணங்கப்படுபவளே! ஸ்ரீவடிவழகியே தினமும் அளவுகடந்த மகிழ்ச்சியையுடையவளே! குமரனைப் பெற்றோய்! சீக்கிரம் அடியேனைக் காத்தருள்க.

மகிமைகள் பெற்ற ஆயிரக்கணக்கான வரங்களை அளிக்கின்ற கொடி போன்ற கைகளையுடையோய்! மேலான தன்மையுடையோய்! வயோதிப,இளமைப்பருவம அடங்கிய லோகமாதாவாக விளங்குபவளே! வடிவழகியே! நன்கு பணிவிடைகள் செய்யப்படுகின்ற பரமேஸ்வரியே! குமரனைப் பெற்றோய் ! சீக்கிரம் அடியேனைக் காத்தருள்க.

மகிமையுடைய கௌலமார்க்கத்தின் இடையூற்றை நன்னெறிப்படுத்துவோய்! மஹாபத்மாடவியில் திரிவோய் மிகுந்த செல்வத்தை அளிப்போய்! தினமும் லக்ஷ்மி சரஸ்வதி இருவராலும் நன்கு துதிக்கப்படுவோய்! வடிவழகியே! தங்களை வழிபடுவதால் பாக்கியத்தையும் விருப்பத்தையும் நிறைவேற்றுவோய்! ஸ்ரீ குமரேஸ்வரித்தாயே. '(16.94 – 101) எனத்துதித்தார். இதனுடைய 6ம்,8ம் பாடல்களில் ஸ்ரீசக்ரராஜம், கௌலமார்க்கம் தொடர்பான ஸ்ரீவித்யா சம்பிரதாயங்கள் இடம் பெறுகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

ஸ்ரீவித்யோபாசனையில் முக்கிய இடம் வகிப்பது ஸ்ரீசக்ரராஜம் எனப்படும் ஸ்ரீசக்ரம் ஆகும்.இவ் ஸ்ரீசக்ரம் எத்தகைய மகிமையும் சிறப்புமுடையது என நந்தி சாஸ்திரங்கள் சிறப்பாக கூறுகின்றன.ஆதிசங்கரரது சௌந்தர்யலஹரீயின் 11வது சுலோகம் மிகத் தெளிவாக விளக்குகின்றது.அதன் விளக்கப்படி ரக்ஷ்மிதரரது உரைச்சிறப்பின்படி அமையும் மேருப்பிரஸ்தார ஸ்ரீசக்ரம் சிவசக்தி ஐக்கியமாக விளங்கும் கருவறையில் சிவசக்திகளின் திருவுருவ சங்கமமும்,சிவசக்தி ஐக்கிய மேரு ஸ்ரீசக்ர யந்திரம் விளங்குவது குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடைய சிறப்பம்சமாகும்.இத முன்னேஸ்வர ஸ்தலத்திற்கேயுரிய தனித்துவமும் சிறப்புமாகும்.

ஸ்ரீ வித்யோபாசனை சக்திக்குரிய சிறந்த வழிபாட்டு மரபாகும்.சிவாமகச் சிறப்புடைய திருக்கோவில் வழிபாட்டுடன் ஸ்ரீவித்யசம்பிரதாயங்கள் பலவற்றையும் உள்ளடக்கி வழிபடும் சிறப்பும் ஆராதனைச் சிறப்பும் முன்னேஸ்வரத்திற்குரிய சிறப்பும் தனித்துவமான முத்திரையுமாகும்.

ஆம்பிகையை வழிபடுவதற்குரிய சிறந்த தினங்களுள் நவராத்திரி முக்கியத்துவம் உடையது.இந் நவராத்திரி நால்வகைப்பட்டன என்பதனை சாஸ்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

நால்வகைப்பட்ட நவராத்திகளின் வகைகளுள் பங்குனி அமாவாசையை அடுத்து வரும் ஒன்பது இரவுகள் லலிதாம்பிகைக்குரிய வசந்த நவராத்திரி எனவும்,மாசி மாதத்து அமாவாசையை அடுத்துவரும் ஒன்பது இரவுகள் லலிதாம்பிகையின் மந்திரியான ராஜமாதங்கிக்குரிய நவராத்திரி எனவும்,ஆடி அமாவாசையை அடுத்துவரும் ஒன்பது இரவுகள் லலிதாம்பிகையின் சேனாதிபதியான மஹாவாராஹிக்குரிய நவராத்திரி எனவும்,புரட்டாசி மாதம் அமாவாசையை அடுத்துவரும் ஒன்பது இரவுகள் துர்க்கை,லக்ஷ்மி,சரஸ்வதிக்குரிய சாரதா நவராத்திரி எனவும் பூஜிப்பதற்குரிய சிறப்பினை உடையன. இந்நான்கு நவராத்திரிகளுள் வசந்த நவராத்திரி,சாரதா நவராத்திரி என்பன சிறப்புமிக்கவை.இவை இரண்டும் முன்னேஸ்வரத்திலே நடைபெற்றுவரும் சிறப்புடையன என்பது குறிப்பிடத்தக்கது.

நவராத்திரிகளுள் வசந்த நவராத்திரி; சாரதா நவராத்திரி ஆகிய இரண்டின் சிறப்பத் தேவை ஏன்?என்பது பற்றிய ஐயங்களும் அவை பற்றிய பலவாறான புராணங்களும் காணப்படுகின்றன.அவற்றுள் தேவீயாகவதம் கூறும் விளக்கம் என்னவெனில்:இரண்டு ருதுக்கள் மிகவும் கொடியவை மனிதர்களுக்கு நோயைத் தருபவை வசந்த ருதுவும் சரத் ருதுவுமாகிய இரண்டும் ஜனங்களுக்கு அழிவை விளைவிப்பவை.(26.6) என்று கூறுகின்றது.எனவே,இவ்விருருதுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே உலகமாதாவாகிய தேவியை அல்லது சக்தியை அழிவிலிருந்து காத்தருளும் வண்ணம் வேண்டப்படும் பிரார்த்தனையே வசந்த நவராத்திரியும் சாரதா நவராத்திரி என்னும் இரண்டுமாம் என்பது புலனாகின்றது.மேலும்,மஹிஷாசுரவதம் நிகழ்த்துவதற்காக தேவி சிவனை நோக்கித் தவமிருந்த ஒன்பது தினங்களே சாரதா நவராத்திரி என்றும் பத்தாம் நாள் அவ் அசுரனைக் கொன்ற தினமே விஜயதசமி என்றும் புராணங்களில் கூறப்படுகின்றது.

ஸ்ரீவித்யோபாசனையின் சிறந்த முக்கியத்துவமுடைய அம்சங்கள் நிறைந்த வழிபாட்டு மரபுகளுடன் முன்னேஸ்வரத்தில் இரு நவராத்திரிகளான சாரதா நவராத்திரியும்,வசந்த நவராத்திரியும் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னேஸ்வரத்தில் சாரதா நவராத்திரி 1926ம் ஆண்டு முதலாக மிகவும் விரிவான கட்டுக்கோப்பான முறையில் பிரம்மஸ்ரீ மு.சோமாஸ்கந்த குருக்கள் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நெறிமுறையின் பிரகாரம் சிறப்பான முறையில் இன்றுவரை நடைபெற்று வருகிறது.

வசந்த நவராத்திரி முன்கேஸ்வரத்தின் பாரம்பரிய முறைப்படி 1974ம் ஆண்டு முதலாக 1986ம் ஆண்டு வரையாக தினமும் ஸ்ரீசத சண்டீ ஹோமமாகவும் 1987ம் ஆண்டு முதலாக ஸ்ரீதச சண்டீ ஹோமமாகவும் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதர் குருக்கள் அவர்களால் நெறிமுறைப்படுத்தப்பட்ட விதிமுறையின் பிரகாரம் இன்றுவரை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இவ்வாறாக புராதன சிவஸ்தலமாக விளங்கும் முன்னேஸ்வரத்தலமானது பாரம்பரியம் மிக்க ஒரு சக்திபீடமாகவும் சிறப்புப் பெற்று விளங்குகின்றமையை காணலாம்.

சிவசக்தியாக உலகின் தாய்,தந்தையாக உறையும் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னைநாதப் பெருமானை வழிபட்டு வேண்டுவார் வேண்டும் நலங்களை பெற்றுய்வோமாக.